18.03.2026
OS. No.36/2023
**வா.சா.1 –** திருமதி.ரேவதி, க/பெ.பழனிசாமி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்)

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>**

சாத்தமங்கலத்தில் என் அம்மாவிற்கு சொந்தமான பூர்வீக சொத்து எதுவும் கிடையாது என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஆறுமுகம் மற்றும் மருதாம்பாள் ஆகியோர்களுக்கு எட்டு குழந்தைகள் ஆவார்கள். அவர்கள் பெயர்கள் முறையே தனம், சரோஜா, பழனிவேல், பாலன், துரைராஜ், சொக்கப்பாண்டியன் ஆகும். அதில் இருவர் சிறுவயதிலேயே இறந்து விட்டதால் அவர்களின் பெயர்கள் எனக்கு நினைவில்லை. வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தில் பிரேமா பணம் கொடுத்ததாகவும், நகைகளை கொடுத்ததாகவும் குறிப்பிடவில்லை. நான் பிரதிவாதிகளுக்கு பாகப்பிரிவினை கேட்டு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அறிவிப்பில் பிரதிவாதிகள் என் அப்பாவை மிரட்டி உயில் எழுதியதாக சொல்லவில்லை. மிரட்டியதாக நான் புகார் எதுவும் கிடைக்கவில்லை. அதற்கான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கினை நான் 21.11.2022ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என் தகப்பனார் 26.11.2022 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் வழக்கை தாக்கல்

செய்து இருந்தாலும் அவரை ஏன் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பழனிவேலு அவருக்கு சொந்தமான சொத்துக்களை பொறுத்து ஆவணம் எழுதி வைத்திருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. ஒரு கூட்டு குடும்ப சொத்து காவல்கார தெருவில் இருந்ததாக சொல்லி இருக்கிறேன். அந்த சொத்தை பொறுத்து என் தகப்பனார் பழனிவேல் அவர்கள் அவரது தகப்பனார் ஆறுமுகத்திற்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக சொல்லி இருக்கிறேன். அதில் இருந்து வந்த வருமானத்தை கொண்டும் வழக்குரை சொத்தை வாங்கியதாக சொல்லி இருக்கிறேன். என் அப்பா அந்த செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு ஏதாவது பணம் வாங்கினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்தை பொறுத்து நான் பாகப்பிரிவினை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. என் தாத்தாவின் சொத்து என்பதால் அதில் எனக்கு பாகம் இருக்கிறதா என்றால் பாகம் இருக்கிறது. அந்த சொத்தைப் பொறுத்து நான் பாகப்பிரிவினை கேட்கவில்லை. அந்த சொத்தைப் பொறுத்து என் தாத்தா ஏதாவது ஆவணம் எழுதி வைத்திருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. காவல்கார தெருவில் இருக்கக்கூடிய வீடானது பழனிவேல் அவர்களின் சுய சம்பாத்திய சொத்து என்பதால் அதைப் பொறுத்து அவர் செட்டில்மெண்ட் எழுதி வைத்திருப்பதால் உரிமை கோர இயலாது என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணம் தற்போது வரை நிலுவையில் இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. என் தாத்தாவிற்கு என் தகப்பனார் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த பிறகும் தாத்தா இறந்த பிறகு என்

தகப்பனாருக்கு அதில் ஒரு பாகம் இருக்கிறது என்றால் சரிதான். அந்த சொத்தை பொறுத்தும் மற்றும் செட்டில்மெண்ட் தொடர்பாகவும் எந்த ஒரு ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கூட்டுக் குடும்ப சொத்து என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் வழக்குரை சொத்து பழனிவேல் அவர்களின் தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் கடந்த 22.11.2022 அன்று ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்திருக்கிறார் என்று சொன்னால் மருத்துவமனையில் இருந்தபோது அவ்வாறு எழுதி வாங்கியிருக்கிறார்கள். அந்த உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், அதனால் தான் அவசர அவசரமாக வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. அதற்கு முன்பாகவே வழக்கை தாக்கல் செய்து விட்டேன். அந்த உயில் ஆவணத்தில் ஆறில் ஒரு பங்கை சொக்கபாண்டியனுக்கு விற்றுவிட்டு அதில் இருந்து வரக்கூடிய பணத்தை எனக்கும் என் சகோதரி சுமதிக்கும் கொடுக்க வேண்டும் என்று எழுதி வைத்திருந்த விபரம் தெரிந்து கொண்டு தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதன்படி ரூபாய் மூன்றரை லட்சம் மட்டும் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தது என்றும், அந்த விபரம் தெரிந்த பிறகு வழக்கை தாக்கல் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல.

வழக்குரைச் சொத்து பழனிவேல் அவர்களின் தனிப்பட்ட உழைப்பின் மூலம் சுயவருமானத்தின் அடிப்படையில் கிரையம் பெறப்பட்ட சொத்து என்பதால் அதைப் பொறுத்து அவருக்கு விருப்புறுதி ஆவணம் எழுதி வைப்பதற்கு உரிமை உள்ளது என்றும், அதன் அடிப்படையில் அவர்

உயில் சாசனம் எழுதி வைத்திருக்கிறார் என்றும், எனவே வழக்குரை சொத்தை பொறுத்து நாங்கள் எந்த பாகப்பிரிவினை பரிகாரமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. உயில் சாசனம் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்பதால் அது செல்லுபடியாக கூடியது என்று சொன்னால் சரியல்ல. உயில் சாசனம் எழுதி வைத்த காலத்தில் என் தகப்பனார் நல்ல உடல் நிலையிலும் நல்ல மனநிலையிலும் தான் இருந்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் என்பதை காண்பிப்பதற்கு உரிய ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் என்னை கஷ்டப்பட்டு திருமணம் செய்து வைத்ததாகவும் போதிய சீர்வரிசை கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், எனக்கு நல்ல நிலையில் நல்ல சீர்வரிசைகள் செய்து தான் திருமணம் செய்தார்கள் என்றும், வழக்கிற்காக நான் அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. பழனிவேலுவை ஜெயபால் மற்றும் அவரது வாரிசுகள் நல்ல முறையில் பார்த்துக் கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக உயில் சாசனத்தை எழுதி வைத்திருக்கிறார் என்றும் அதற்கு மாறாக நான் கூறும் சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்றும், உயில் சாசனத்தின் அடிப்படையில் தான் சொத்து பிரிவினை செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பழனிவேல் உயிருடன் இருந்த காலம் வரையில் நான் எந்த உரிமையும்

கோராமல் இருந்துவிட்டு தற்போது உயில் பொய்யானது என்று வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழக்கு அறிவிப்பு அனுப்பாத காரணத்தினாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. உயில் மோசடியாக தயாரிக்கப்பட்டதாக நான் கூறக்கூடிய வாதத்திற்கு ஆதரவாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் உயில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

Web Copy